தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேசிய கருத்தரங்கு "உயிர்ப்பொருட்களில் இருந்து பசுமை எரிபொருள் - உயிர்ம சுத்திகரிப்பு அணுகுமுறை"

வளர்ந்து வரும் ஆற்றல் தேவையைக் கருத்தில் கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களான தேசிய சாண எரிவாயு மற்றும் உரமேலாண்மைத் திட்டம், ஜவஹர்லால் நேரு சூரிய ஆற்றல் திட்டம், உன்னட் அடுப்புத் திட்டம் (மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டம்), மேற்கூரை சூரிய சக்தி நிலையம், சூரிய ஆற்றலில் இயங்கும் வேளாண் நீர் இறைக்கும் இயந்திரம், உயிர்மக்கழிவு ஆற்றல் உற்பத்தி அமைப்பு போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இன்றைய நிலையில், தேசிய அளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி, மொத்த உற்பத்தியில் (2,30,000 மெகாவாட்) 12.17 சதவிகிதம் அதாவது 28,000 மெகாவாட்டாகும். தமிழ்நாட்டில் மின் உற்பத்தியானது 10,000 மெகாவாட் ஆகும் ஆனால் மின்தேவை 12,000 மெகாவாட்டிற்கும் அதிகமாக உள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசு 2012-ல் சூரிய ஆற்றல் கொள்கையை வெளியிட்டது. இக்கொள்கையின் நோக்கம் மூன்று ஆண்டுகளில் 3000 மெகாவாட் அளவு மின்உற்பத்தியை சூரிய ஒளி மின்னாக்கி மூலம் உற்பத்தி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமானது, கழிவுநீர் சுத்தகரிப்புக்கு அதிவேக உயிர் எரிவாயு உற்பத்திக்கலன், வேளாண் பொருட்களை மதிப்புக்கூட்ட சூரிய உலர்த்தி, மேம்படுத்தப்பட்ட அடுப்புகள், உயிர்மக்கழிவுகளிலிருந்து வெப்ப எரிவாயு உற்பத்திக்கலன் போன்ற பல்வேறு சாதனங்களை தொழிற்சாலைகள், உழவர்கள், தொழில் முனைவோர், அரசுசாரா நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு பயனாளிகளுக்கும் பயன்படும் வகையில் வடிவமைத்துத் தயாரித்துள்ளது.

இதன் தொடர்பாக, உயிர் ஆற்றல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமானது உயிர்ப்பொருட்களில் இருந்து "பசுமை எரிபொருள் - உயிர்சுத்திகரிப்பு அணுகுமுறை" என்ற ஒருநாள் தேசிய கருத்தரங்கை நவம்பர் 08, 2014 – அன்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், இந்திய அரசின் உதவியுடன் நடத்துகின்றது. இக்கருத்தரங்கில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சரகத்தின் ஆலோசகர், தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி ஊழியர்கள், முன்னணி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சாதனங்கள் தயாரிப்பாளர்கள், வேளாண் கல்லூரி மற்றும் பிற நிறுவனங்களின் வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். உழவர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சாதனங்கள் மற்றும் தொழிற்நுட்பங்களை நிறுவுவதற்கு, மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து தேவையான வங்கிக்கடன் மற்றும் மானியங்களை பெறுவதன் முறைகளைப்பற்றி வல்லுநர்கள் உரையாற்ற இருக்கின்றனர்.

<u>இக்கருத்தரங்கு பற்றிய மேலும் விபரங்களுக்கு</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
உயிர் ஆற்றல் துறை,
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611276